**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண்.128/2021**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருண்மொழி | க/பெ.: | புகழேந்தி |
| கிராமம்: | கரிக்காடு கிராமம் | தாலுக்கா: | பட்டுக்கோட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 56 | முகவரி: | 125/2, காந்தி நகர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 14.03.2023

**முதல் விசாரணை :–**

நான் வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.08.2017 | இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வாதி குடும்ப உறுப்பினர்கள் பெயரில் பட்டா இருப்பதற்கான சிட்டா நகல்கள் கோர்வை (நெ.11)– கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | -- | தாவா சொத்தைப் பொறுத்து மன்னார்குடி சார்பு நீதிமன்ற பாகப்பிரிவினை அசல் வழக்கு எண்.33/2015 வழக்குரை – நகல் |
| வா.சா.ஆ.3 | -- | மன்னார்குடி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.33/2015 எதிர்வழக்குரை – நகல் |
| வா.சா.ஆ.4 | 02.02.2017 | வாதி வழக்கறிஞர் மூலம் 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு அளித்த அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகளுடன் (நெ.3) – அசல் |
| வா.சா.ஆ.5 | -- | மேற்படி அறிவிப்பை 7 முதல் 10 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான பதிவஞ்சல் ஒப்புதல் அட்டை – அசல் |
| வா.சா.ஆ.6 | 23.02.2017 | மேற்படி அறிவிப்புக்கு 10ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய குறிப்பாணை – அசல் |

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**